DEPOSITION OF WITNESS
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

MCOP No.28/2024

மனுதாரர் தரப்பு 1 வது சாட்சி

Name முருகேசன்

Father's Name த/பெ. தங்கவேல்

Village கூட்டாம்புளி

Taluk

Age 43

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.03.2026.

**முதல் விசாரணை :–**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். மனு சம்பந்தமாக எனது முதல் விசாரணை சாட்சியத்திற்காக நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையொப்பங்கள் செய்துள்ளேன். எனது வழக்கிற்கு ஆதரவாக பின்வரும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். முதல் தகவல் அறிக்கை CCTNS நகல் **ம.சா.ஆ.1.** விபத்து பதிவேடு நகல் **ம.சா.ஆ.2.** PY 01 CQ 5005 என்ற பதிவெண் கொண்ட 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் RC Book நகல் **ம.சா.ஆ.3.** PY 01 CQ 5005 என்ற பதிவெண் கொண்ட 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் இன்சூரன்ஸ் பாலிசி நகல் **ம.சா.ஆ.4.** தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் சம்மரி அசல் **ம.சா.ஆ.5.** தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட CT Scan Report (4 எண்ணம்) நகல் **ம.சா.ஆ.6.** தூத்துக்குடி மருத்துவ கல்லூரி மருத்துவமனை CT Scan Bill

Rs.2000/-க்குரியது நகல் **ம.சா.ஆ.7.** தூத்துக்குடி ராஜேஷ் திலக் மருத்துவமனை மருத்துவரின் Prescription Sheet (6 எண்ணம்) நகல் **ம.சா.ஆ.8.** தூத்துக்குடி ராஜேஷ் திலக் மருத்துவமனை CT Scan Report அசல் **ம.சா.ஆ.9.** ஜோசப் மருத்துவமனை மற்றும் ஜேக்கப் மருத்துவமனை மருத்துவரின் Prescription Sheet நகல் **ம.சா.ஆ.10.** கந்தசாமி மருத்துவமனை Medical Bill Rs.4,05,552/-க்குரியது (24 எண்ணம்) அசல் **ம.சா.ஆ.11.** ராஜேஷ் திலக் மருத்துவமனை மருத்துவ பில் ரூ.11,366/-க்குரியது அசல் **ம.சா.ஆ.12.** திலக் மருத்துவமனை மருத்துவ பில் ரூ.6,000/-க்குரியது அசல் **ம.சா.ஆ.13.** என்னுடைய ஆதார் கார்டு நகல் **ம.சா.ஆ.14.** என்னுடைய வங்கி கணக்கு புத்தகம் நகல் **ம.சா.ஆ.15.** என்னுடைய பான் கார்டு நகல் **ம.சா.ஆ.16.** (ம.சா.ஆ.14 முதல் 16 வரையானவை அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது.) தூத்துக்குடி மருத்துவ குழுமத்தால் வழங்கப்பட்ட ஊனச்சான்றிதழ் **நீ.ம.சா.ஆ.1**. எனவே மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை: -</u>**

விபத்து 05.04.2022 அன்று நடந்தது. 06.04.2022 அதிகாலை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டேன். 09.04.2022 அன்று மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டேன். எனது விடுவிப்பு சான்று ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன்பிறகு 1 வருடம் கழித்து ராஜேஷ் திலக் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டேன். அங்கு 2, 3 நாட்கள் சிகிச்சை எடுத்தேன். அதற்கான மருத்துவ பில் ம.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன்பிறகு வலி குறையாத காரணத்தினால் டுவிபுரம் 5 வது தெருவிலுள்ள கந்தசாமி என்ற மருத்துவரிடம் சிகிச்சை பெற்றேன்.

வலி இருக்கும்போதெல்லாம் செல்வேன். கந்தசாமி மருத்துவரிடம் 6 மாதத்திற்கு மேலாக சிகிச்சை பெற்றேன். ராஜிவ் நகர் சென்று எனது தம்பி மருந்துகள் வாங்கி வருவார். அதற்கான மருத்துவரின் Prescription தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.11ல் உள்ள 24 மருத்துவ பில்களில் 17.07.2021 தேதியிட்டு 4 பில்கள் உள்ளது. 24.08.2021 தேதியிட்டு 3 பில்கள் உள்ளது. 30.09.2021 தேதியிட்டு 2 பில்கள் உள்ளது. 26.10.2021 தேதியிட்டு 3 பில்கள் உள்ளது. 12.12.2021 தேதியிட்டு 3 பில்கள் உள்ளது. 12.02.2022 தேதியிட்டு 3 பில்கள் உள்ளது. 23.03.2023 தேதியிட்டு 3 பில்கள் உள்ளது. 05.05.2023 தேதியிட்டு 3 பில்கள் உள்ளது. 19 பில்கள் 2021லும் 3 பில்கள் 12.02.2022 தேதியிட்டும், 2 பில்கள் 23.03.2023 தேதியிட்டும், 3 பில்கள் 05.05.2023 தேதியிட்டும் உள்ளது. இது தவிர வேறு பில்கள் கிடையாது. நான் தாக்கல் செய்த 19 பில்களும் விபத்திற்கு முந்தைய தேதியிட்ட பில்கள் என்றும் மேற்படி 24 பில்களும் ஒரே நபரால் எழுதப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி பில்களை அதிக இழப்பீடு பெறும் எண்ணத்தில் உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**(எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)**

**ஒம்/-R.V.ராஜகுமார்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**